1978 மார்ச் 10]

(ஆ) ஆம் எனில், அதனை அரசு உடன் மாற்றி நீதி வழங்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) குறைந்தபட்சம் இன்ஜினியரிங் டிப்ளமா பெற்றிருப்பவர் மட்டுமே தொழில் நுட்ப உதவியாளர் வேலைக்கு நியமிக்கப்படுகிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி.-க்குப்பின் ஒன்று அல்லது இரண்டு இன்ஜினியரிங் பாடங்களில் தனியாக சர்டிபிகேட் வாங்கியவர்கள் பணி ஆய்வாளர்களாக நியமிக்கப்படுவதற்கே தகுதி பெற்றவர்கள் ஆவார்கள். தொழில் நுட்ப உதவியாளர்களுக்கும் பணி ஆய்வாளர்களுக்கும் வெவ்வேறு சம்பள விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

தென் சென்னை மின் வழங்கு நிறுவன ஊழியர்கள்.

*விஞ 486.—**திரு. செ. சதாசிவம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தென் சென்னை மின் வழங்கும் நிறுவனத்தின் ஊழியர்கள் சுமார் 4 வருடங்களாகியும் மின் வாரியப் பணியாளர்களாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) இப்பணியாளர்களைப் பணியில் முறைப்படுத்துதல் போன்ற கோரிக்கைகள் தமிழ்நாடு மின் வாரியத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. வாரியம், சம்பந்தப்பட்ட ஊழியர்களின் தொழிற் சங்கங்களோடு பேச்சு வார்த்தைகளை நடத்தி வருகிறது. அவை முடிந்தவுடன், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, இது போலவே தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்தில் உள்ளதை அரசாங்கம் மேற்கொண்டது. அந்த மின்வாரியப் பகுதியிலே

உள்ள தொழிலாளர்களுக்கு, தமிழ்நாடு மின் வாரியத்தில் உள்ளதுபோன்ற சலுகைகள் அளிக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? கும்பகோணத்திலுள்ளவர்களுக்கு மற்றவர்களுக்கு, மற்றத் தொழிலாளர்களுக்கு அளிப்பதுபோல் அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தகவல் இல்லை.

மின்வாரியப் பொறியாளர் தேர்வு

* வினு 487—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1975 ஆம் ஆண்டு மின்சார வாரியத்தில் எத்தனை பொறியாளர்கள் தேர்வு பெற்றுர்கள் ?

(ஆ) எத்தனை பேர் வேலையில் சேர்க்கப்பட்டனர் ?

(இ) தேர்வு வரிசைப்படி வேலையில் சேர்க்கப்பட்டனரா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 250 நபர்கள்.

(ஆ) 212 நபர்கள் தான் வேலையில் சேர்ந்தனர்.

(இ) ஆம்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் வேலைக்குத் தேர்வு செய்யப்பட்டு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வேலைக்கு அமர்த்தப்படாமல் இருந்தார். ஆனுல் நான் அதைப்பற்றி விவரங்களை அறிய விரும்பவில்லை. இருந்தாலும், சீனியாரிட்டி செலக்ஷன் லிஸ்ட் அடிப்படையில் சீனியாரிடி கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சீனியாரிடிபடித்தான் நியமனம் செய்யப்பட்டிருக்கிறது என்ற தகவலை தந்திருக்கிறுர்கள். வேறு விவரங்கள் இருக்குமானுல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து எழுதித் தந்தால் **தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU 600 009 வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS